

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின்
கருணாகரக் கடவுள்
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# கருணாகரக் கடவுள்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. சர்வ காலமும் நினைவனோ?
2. ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக்கடவுளே.
3. கதிக்கு வகை ஏதுபுகலாய்?
4. நான் என்று நீ என்று இரண்டு இல்லை
5. பொய்யும் மெய்யும்
6. பண்ணேன் உனக்கான பூஜை
7. சகமீது இருந்தாலும் மரணம் உண்டு
8. சதாகால பூஜையா ஒப்புவித்தேன்
9. அன்பர் அன்புக்கு எளியை
10. நல்லறிஞர் எக்காலமும் உதவுவார்.

## 1. சர்வ காலமும் நினைவனோ?

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க” என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பாடுகிறார்.**

சிறு நேரம் கூட (இமைப்பொழுதும்) என் உள்ளத்தைவிட்டு (என் நெஞ்சில்) அகலாமல் இருப்பவன் (நீங்காதான்) திருவடிகளைப் பணிவோம் (தாள் வாழ்க)

இமைப்பொழுது என்பது, நாம் கண் சிமிட்டும் அளவிலான காலத்துளி. இமைப்பொழுது என்பதையும்விட, காலம் மேலும் துல்லியமாகவும் அளக்கப்படக் கூடியதுதான்.

எனினும், மனிதர்களாகிய நமக்கு, இமைப்பொழுது என்பதே, அனுபவத்தில் காணக்கூடிய துல்லிய காலம்.

எனவேதான் மாணிக்கவாசகர், இமைப்பொழுது எனும் கால அளவைக் காட்டி, அந்த இடைவெளியிலும் கூ ட நம்மை விட்டு விலகாமல் நம்முள்ளேயே இறைவன் இருக்கின்றான் எனக் கூறுகின்றார்.

அந்த இறைவன் நம்முள்ளே எங்கே இருக்கிறான்?

‘அகப்படும் சிவம்’ அல்லவா, அதனாலே, சிவன் எல்லோரின் நெஞ்சிலும் இருக்கின்றான்.

‘ஹ்ருதயம்’ எனும் சம்ஸ்கிருதச் சொல், தசைகளாலான ‘இதயம்’ எனும் உறுப்பினை காட்டுவது அல்ல.

அதன் பொருள், உள்ளமாகிய மையம்; அதுவே நெஞ்சம், நமக்குள் – எல்லா உணர்வுகளுக்கும் ஆதாரமாய் இருப்பது.

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விடய கைவல்யமாம்
நிஷ்கள அசங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுக்த

தற்பரவிஸ் வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்பு சிவ சங்கர சர்வேச என்றுநான்
சர்வகா லமும்நினைவனோ?

அற்புத அகோசர நிவிர்த்திபெறும் அன்பருக்கு

ஆனந்த பூர்த்தியான
அத்வைத நிச்சய சொரூபசா சஷாத்கார
அநுபூதி அநுசூதமும்

கற்பனை அறக்காண முக்கணுடன் வடநிழல்
கண்ணூடு இருந்தகுருவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே." (தா.பா.47)

- முக்குணங்கள் அற்றவனே!
- குறைவற்றவனே!
- களங்க மற்றவனே1
- எதனையும் பற்றி நில்லாதவனே!
- கண்களுக்குப் புலனாகாதவனே!
- மோட்ச வடிவினனே!
- வடிவமற்றவனே!
- எதனோடும் சேராதவனே!
- அசைவற்றவனே!
- சொல்லால் விளக்க முடியாதவனே!
- இரண்டு என்று சொல்ல முடியாதவனே!
- எப்பொழுதும் நிலைத்திருப்பவனே!
- உலகங்களுக்கு அப்பாற்பட்டு நிற்பவனே!
- அறிவுப் பெருவே ளியே!
- முழுமையாக எல்லாவற்றிலும் நிறைந்து விளங்குபவனே!
- எப்பொழுதும் இன்பமுற்று இருப்பவனே!
- ஞானமயமானவனே!
- தெய்வத் தன்மை பொருந்தியவனே!
- அன்பனே!
- மங்களமானவனே!
- நன்மை செய்பவனே!

- இறைவனே!

என்று நான் எல்லாக் காலங்களிலும் உன்னை நினைத்துக் கொண்டு இருப்பேனோ? (இருக்க வேண்டும் என்பது கருத்து.)"

"இறைநிலையோடு எண்ணத்தை கலக்கவிட்டு,
ஏற்படும்ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க,
நிறைநிலையே தானாக உணர்வ தாகும்.
நித்தம் நித்தம் உயிர்உடலில் இயங்கு மட்டும்
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள,
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்.
கறைநீங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்.
கரைந்துபோம் தன்முனைப்பு. காணும் தெய்வம்." (ஞாக.பா.1487)

நினைப்பே நடப்பு என்பார்கள். உங்கள் மனதில் எப்பொழுதும் இறைசிந்தனையில் இருந்தீர்கள் என்றால் "இமைப்பொழுதும் நீங்காத இறைவனடியை எண்ணிக் கொண்டிருந்தால் என்ன பலன் கிடைக்கும். மகரிஷி சொல்கிறார்.

ஒவ்வொரு நொடிப்பொழுதம் இறைநிலையோடு கலந்திருந்தால், நிறைநிலை தானாக வந்துவிடும்.

விழிப்பு நிலை இயற்கையாக அமைந்துவிடும். உயிர் உடலில் இயங்கும் மட்டும் இந்த எண்ணத்தில் பழகி, வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதனால்- உலக இன்பங்களில் அளவுமுறை ஏற்படும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் நீங்கிவிடும்.


தன்முனைப்பு என்ற ஆணவம் கரைந்துபோகும். ஆனந்தமான பரம்பொருளோடு நாமும் ஆனந்தமயமாக வாழலாம்.

இந்த ஆனந்த வாழ்வுக்கு, மாணிக்கவாசகரையும் வேதாத்திரி மகரிஷியையும் மனதில் நிறுத்திக் கொள்ள உள்ளே வாருங்கள்.

இந்த மகான்களைப் போல் இறையுணர்வும் ஆனந்தமும் பெற்று வாழ்வோம். வாழ்க வளமுடன்.

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம்.

ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.




## 2.ஆனந்த நிர்த்தமிடு கருணா கரக்கடவுளே.

வேதாந்தம் எனப்படும் தத்துவம் உபநிடதங்களின் சாரம். வேதங்களின் அந்தமாக விலங்கும் உபநிடதங்கள் இந்தப் பிரபஞ்சம் குறித்தும் அதன் ஆதாரம் குறித்தும் தேடலை மேற்கொள்கின்றன.

இந்தத் தேடலில் பல்வேறு தத்துவங்களும் கருதுகோள்களும் முன் வைக்கப்படுகின்றன.

கவித்துவமான முறையில் மிகச் சுருக்கமாகச் சொல்லப்படும் இந்தக் கருத்துகள் பல விதமான விவாதங்களுக்கும் விளக்கங்களுக்கும் வழி வகுக்கின்றன.

மனித வாழ்வையும் இந்தப் பிரபஞ்சத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பையும் பற்றிச் சிந்திக்க விரும்புபவர்களுக்குப் பல விஷயங்களை அள்ளித் தருவது வேதாந்தம்.

"ஆனந்தோ ப்ர உற்மேதி வ்யஜானாத்!
ஆனந்தாத்த்யேவ கல்விமானி பதானி ஜாயந்தே!
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி!
ஆனந்தம் ப்ரயன்த்யபிஸம்விசந்தி! (தைத்தியோசநிஷதம் 3 – 6)

ஆனந்தம் பிரம்மம் என்ற (சாதகன்) ஞானத் தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.

பிறந்தவைளெல்லாம் ஆனந்த நத் திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனியுரிமையாகாது.

அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி, ஆனந்தத்தில் நிலைத்திருந்து, ஆனந்தத்தில் ஒடுங்குகின்றன.

ஆனந்தத்தை அறியாதார் யார்? ஆனந்தமில்லாது யார் உயிர் வாழந்திருக்க முடியும்? உலப்பில்லா ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.

ஆத்மா, பிரம்மம் ஆகிய விஷயங்கள் பற்றியும் உபநிடதங்கள் ஆழமாகப் பேசுகின்றன.

உபநிடத சிந்தனைகள் ஆத்மாவைப் பற்றி விளக்குவதற்கு முன்பு நம் உடலைப் பலவாறாகப் பகுக்கின்றன.

மனித உடலை ஐந்து கோசங்களாகப் பிரித்துப் பார்க்கும் ஒரு பகுதி தைத்ரிய உபநிடதத்தில் வருகிறது.

பஞ்ச கோசங்கள் என்று இவை குறிப்பிடப்படுகின்றன. கோசம் என்றால் உறை; பஞ்ச என்றால் ஐந்து.

அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் ஆகியவையே இந்த கோசங்கள். இவற்றைப் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

## அன்னமய கோசம்

நம் ஸ்தூல உடல் அன்னம் அதாவது உணவால் தோன்றி, உணவால் வளர்ந்து, உணவின் மூலமாகிய மண்ணில் சிதைந்து அழிகிறது.

இதுவே அன்னமய கோசம் எனப்படுகிறது. உடலுக்கும் வாழ்வுக்கும் உணவின் முக்கியத்துவம் என்னவென்பதை இது உணர்த்துகிறது.

## பிராணமய கோசம்

வாயு (காற்று) உடலின் உள்ளும் புறமும் இருக்கிறது. உடலுக்குள் இது மூச்சுக் காற்றாக உள்ளது.

இதன் இயக்கத்தாலேயே உடலின் எல்லா உறுப்புகளும் இயங்குகின்றன. இதன் மூலம் செயலாற்றும் புலன்கள், உயிர் வாழ்வதற்கு அவ்சியமான உள் உறுப்புகள், அவற்றின் இயக்கங்கள், ஆகியவை பிராணமய கோசம் என வகைப்படுத்தப்படுகின்றன.

## மனோமய கோசம்

உணர்ச்சிகள், உணர்ச்சிகளுக்கு ஆதாரமான மனம், அதன் பல்வேறு அடுக்குகள், செயல்பாடுகள் ஆகியவை மனோமய கோசம் எனப்படும்.

## விஞ்ஞானமய கோசம்

எது சரி, எது தவறு? எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது? எது உண்மை, எது பொய்? எது நிலைக்காது, எது நிலைக்கும்?

இதுபோன்ற தர்க்க ரீதியான தேடல்களை நம் பகுத்தறிவும் சிந்தனைத் திறனும் மேற்கொள்கின்றன.

அறிவின் இந்த இயல்புகளும் செயல்பாடுகளும் அடங்கிய உறை விஞ்ஞானமய கோசம் எனப்படும்.

## ஆனந்தமய கோசம்

ஆனந்தமய கோசம் என்பது இந்த அடுக்குகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு இருக்கும் நிலை. இந்த நிலையை உணர்வதும் அடைவதும் ஆன்மிகத்தின் லட்சியம் என்று சொல்லலாம்.

மனித வாழ்வு என்பது இவை ஐந்தையும் உள்ளடக்கியது. ஐந்தாவது கோசம் நம் புலன் அறிவுக்கு அப்பாற்பட்டது.

மற்ற நான்கு கோசங்களையும் நாம் உணரவும் அறியவும் முடியும். ஒவ்வொருவரும் உடல், மனம், அறிவு இதில் ஏதேனும் ஒன்றுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்.

அதற்கு மாறாக இவை ஒவ்வொன்றும் ஒரே உடலின், ஒரே வாழ்வின் வெவ்வேறு அடுக்குகள் என்பதை உணர்ந்தால் ஒருங்கிணைந்த விதத்தில் நம்மை நாமே அணுகிப் புரிந்துகொள்ளலாம்.

எல்லாமே சேர்ந்ததுதான் நம் வாழ்வு என்பதையும் எந்த ஒன்றுடனும் நாம் நின்றுவிடக் கூடாது என்பதையும் அனுபவபூர்வமாக உணர்பவர் எல்லாக் கோசங்களையும் தாண்டி ஆனந்தமய கோசத்தை உணர முடியும் என்பது இதன் உட்பொருள்.

தைத்ரிய உபநிடதத்தில் எது பிரம்மம் என்னும் தேடலில் அன்னமே பிரம்மம் என்று முதலில் உணரப்படும்.

பிறகு இது படிப்படியாக நகர்ந்து பிராணனே பிரம்மம், மனமே பிரம்மம், விஞ்ஞானமே பிரம்மம் என்ற முடிவுகள் எட்டப்படும்.

கடைசியில் ஆனந்தம் பிரம்மணோ வியஜானாத் (ஆனந்தமே பிரம்மம் என அறிக) என முடியும்.

## ஆனந்தம்  இல்லாத இடமில்லை



ஆனந்தம் முடிவில்லாதது.

ஞானத்துடன், அறிவுடன் பார்த்தால் எல்லாவற்றையும் ஆனந்தமாகவே பார்ப்போம்.

உண்மையாக அறிந்தால் எல்லாம் ஆனந்தம் என்று காண்போம்.

ஆனந்தம் எல்லையில்லாதது.

அது இல்லாத இடமில்லை.

மண்ணாதி ஐந்தொடு புறத்தில்உள கருவியும்,
வாக்காதி சுரோத்ராதியும்,
வளர்கின்ற சப்தாதி. மனமாதி கலையாதி
மன்னுசுத் தாதி உடனே

தொண்ணூற்றொடு ஆறுமம், மற்று உள்ளனவும் மௌனியாய்ச்
சொன்ன ஒரு சொற்கொண்டதே,
தூவெளிய தாய்அகண்  ஆனந்த சுகவாரி
தோற்றுமதை என்சொல்லுவேன்?

பண்ஆறும் இசையினொடு பாடிப். படித்து, அருள்
பான்மைநெறி நின்று தவறாப்
பக்குவ விசேடராய் நெக்குநெக் குருகிப்
பணிந்து எழுந் து, இருகை கூப்பிக்.

கண்ஆறு கரைபுரள நின்றஅன் பரை எலாம்
கைவிடாக் காட்சி உறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.” (தா.பா.48)

- நிலம் முதலிய பூதம் ஐந்தினொடு.
- புறத்தில் விளங்கும் வாக்கு முதலிய தொழிற் கருவிகள் ஐந்தும்.
- காது முதலிய அறிவுக் கருவிகள் ஐந்தும்.
- ஓசை முதலிய தன்மாத்திரை ஐந்தும்.
- மனம் முதலிய அகக் கருவிகள் நான்கும்.
- கலை முதலிய வித்யா தத்துவம் ஏழும்.
- சுத்தவித்தை முதலிய சிவதத்துவம் ஐந்தும்.
- ஆக முப்பத்தாறு தத்துவங்களுடன், அறுபது தாத்துவிகங்களும் கூடி நிற்க.
- வரும் தொண்ணூற்று ஆறினையும், கடந்து, பேசாத நிலையில் சொன்ன ஒரு சொல் கொண்டு,
- அதுவே தூயவெளியாய் நிற்பது கண்டு.
- பேரின்பப் பெருங்கடலாய் இன்பம் விளைவிப்பது குறித்து எவ்வாறு விரித்துரைப்பேன்? (விரித்துரைக்க இயலாது என்பது கருத்து)

பேரின்பப் பெருங்கடலாய் இன்பம் விளைவிப்பது குறித்து எவ்வாறு விரித்துரைப்பேன்? என்று இறைநிலையை தாயுமானவர் போற்றுகிறார். அருட்தந்தை வேதாத்திரி மகரி \p யோ.....

“பேரண்டப் பெருவெளியை நினைக்குந் தோறும்
பெருகிவரும் இன்பத்தை யான் என் சொல்வேன்” (ஞா.க.1419)

என்று பல இடங்களில் "பரம்பொருள் ஆனந்தமயமானது" என்று போற்றுகிறார் மகரிஷி.

"இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா" (ஞா.க.பா.1648-1)

உடல், உயிர் மனம் மூன்றும் ஒன்றிணைகின்றபோது அறிவானது விரிவடைந்து, தன்னிலே எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தன்னையும் காணக்கூடிய உணர்வுநிலை பேரின்ப நிலை ஆகும்.

இறைநிலையானது அறிவாக தோற்றங்கள் அனைத்திலும் ஊடுருவி நிறைந்து. ஒன்றோடு ஒன்று இணைத்துக் கொண்டுள்ளது.

அந்த அறிவானது அன்பை ஊற்றுப்போல சுரந்து கொண்டும் பெருகிக் கொண்டும் உள்ளது. பரம் ஆனந்தமாக இன்ப ஊற்றாக உள்ளது என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி.

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 3. கதிக்கு வகை ஏதுபுகலாய்?

.

சோழநாடு சோறுடைத்து என்னும் வாக்கிற்கிணங்க நெல்லும் கரும்பும் ஏராளமாக விளையும் நாடு சோழநாடு. உறையூர் நகரில் ஒருநாள் சூரியன் உதிக்கும் போதே மிகப் பிரகாசமாக உதித்தான்.

பறவைகள் எல்லாம் உற்சாகமாகப் பாடின. நல்ல நிமித்தங்கள் தோன்றின.

அந்நகரில் வாழ்ந்த பாணர் குலத்தில் பிறந்த ஒரு பாணன் நெல் வயலின் பக்கமாக நடந்து சென்றான்.

திடீரென்று ஒரு குழந்தை அழுகுரல் கேட்டது. நெற்பயிரை விலக்கிப் பார்க்க அங்கே பயிரின் ஊடே ஒரு அழகிய ஆண் குழந்தை கிடக்கக் கண்டு அதை எடுத்து உச்சி மோந்தான். பிள்ளையில்லாத தனக்கு ஆண்டவனே அளித்த பரிசு என மிக மகிழ்ந்தான். அவன் மனைவியும் தனக்கு அமுதமே கிடைத்தது போல மகிழ்ந்தாள்.

திருமால் அருளால் கிடைத்த குழந்தை என மிகவும் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். இவரும் தாம் புகுந்த குலத்துக்கு ஏற்ற யாழ் பாடலில் சிறப்புற்று விளங்கினார்.

எனவே பாணர் குலத்தார் யாவரும் இவரை பாணர் குலத் தலைவர் என ஏற்றுக் கொண்டனர். இவரின் சிறப்புக் கருதி இவரை திருப்பாணர் என அழைத்தனர்.

திருப்பாணர் திருவரங்கத்துத் திருமாலான திருவரங்கன் மீது மாறாத அன்பு பூண்டிருந்தார். அவர் மீது பாக்கள் பாடவேண்டும் என்ற எண்ணத்தினால் திருவரங்கம் வந்து சேர்ந்தார்.

இவர் தன்னைத் தாழ்ந்த குலத்தினன் என்று எண்ணிய காரணத்தால் திருவரங்கத்திற்குள் அடியிடாமல் காவிரியாற்றின் தெற்குக் கரையிலேயே நின்று அரங்கனின் திருக்கோயிலின் கோபுரத்தை தரிசித்து வந்தார்.

சிலநாட்கள் கழிந்தன. தினமும் வைகறையில் காவிரிக் கரையில் நின்று "ரங்கா, ரங்கா," என்றழைத்ததோடு கேட்பவர் உள்ளம் குளிரவும் இறைவன் மனம் மகிழவும் பக்தியால் உள்ளம் பரவசமடையப் பாடினார்.

இவ்வாறு தினமும் இவரது சேவை தொடர்ந்து நடந்தது.

ஒருநாள் வைகறை நேரம் திருப்பாணர் கையில் யாழ் மீட்டிக்கொண்டு இறைவனைக் குறித்துப் பாடிக் கொண்டு இருந்தார்.

அப்போது உலோகசாரங்க முனிவர் காவிரியில் நீராடித் திருமண் அணிந்து துளசி மாலையும் தாமரைமணி மாலையும் அணிந்து கொண்டு கையில் பொற்குடத்தை ஏந்திக் கொண்டு அங்கு வந்தார்.

திருவரங்கன் திருவாராதனம் செய்யும் பொருட்டு காவிரியில் நீர் கொண்டு போக அவ்விடம் வந்தவர் திருப்பாணர் தன்னை மறந்து பாடிக்கொண்டு இருப்பதைப் பார்த்து அவரை "ஏய்! தூர விலகிப் போ" என்று கூக்குரலிட்டார்.

உலகையே மறந்து இறைவனைப் பற்றிப் பாடிக்கொண்டிருந்த திருப்பாணனின் காதில் இவரது கூக்குரல் விழவில்லை.

அதனால் இவரைத் தூர விலக்குவதற்காக உலோகசாரங்கர் ஒரு சிறு கல்லை எடுத்து இவர் மீது வீசினார். அது பாணரின் நெற்றியில் பட்டது. தெளிவு பெற்ற பாணர் தன் எதிரே முனிவர் நிற்பதைப் பார்த்து உடல் நடுங்க கரம் குவித்து அவ்விடம் விட்டகன்றார்.

பின்னர் முனிவர் பொற்குடத்தில் நீர் முகந்து கொண்டு கோவிலுக்கு வந்தார். அரங்கனுக்கு அந்நீரை அபிஷேகம் செய்யும் பொருட்டு அருகில் சென்றார். அருகே சென்றவர் திடுக்கிட்டார்.

அரங்கநாதனின் நெற்றியிலிருந்து ரத்தம் பெருகி வந்து கொண்டிருந்தது. இச்செய்தி மன்னருக்கும் தெரிவிக்கப் பட்டது.

உடனே மன்னன் மந்திரி பிரபுக்கள் புடைசூழ அங்குவந்து சேர்ந்தான். இறைவனின் நெற்றியிலிருந்து குருதி பெருகக் காரணம் அறியாது அதைப் போக்கவும் வழியறியாது அனைவரும் திகைத்தனர்.

மன்னனோ "இறைவா! அரங்கப் பெருமானே அடியேனோ என்நாட்டு மக்களோ அறியாது ஏதேனும் பிழை செய்திருந்தால் பொறுத்து அருளவேண்டுகிறேன். இக்குறை தீர வழி எதேனும் காட்டியருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்..

அனைவரும் கவலையுடன் சென்றனர்.

இறைவன் திருப்பாணருக்கு அருள் செய்ய எண்ணம் கொண்டான் .

அத்துடன் அவரது அன்பையும் பெருமையையும் உலகுக்கு உணர்த்த வும் முடிவு செய்தான். இறைவனின் திருவருள் பெற அன்பே முதன்மையானது என்பதை உலகத்தார் அறியச் செய்ய வேண்டும் என்று திருவுளம் கொண்டான்.

அன்று இரவு உலோகசாரங்க முனிவரின் கனவில் தோன்றிய இறைவன் "எனது அன்பனாகிய திருப்பாணனை அவன் இழிந்தவன் என எண்ணாமல் அவனை உன் தோள் மீது தூக்கி எம்முன் கொணர்க" எனக் கட்டளையிட்டான்.

இக்கனவை எண்ணி வியப்படைந்த உலோகசாரங்க முனிவர் இறைவன் கட்டளைப் படியே திருப்பாணனின் இருப்பிடம் சென்றார்.

பல அன்பர்கள் புடைசூழ முனிவர் வருவதைக் கண்டு திகைத்தான் பாணன்.

அவரை நெருங்கிய முனிவர் தன் தலைமேல் கரங்குவித்து அவரை வணங்கி இறைவனின் கட்டளையைக் கூறித் தன் தோள் மீது அமருமாறு வேண்டிக் கொண்டார்.

ஆனால் பாணன் மறுத்தான். இழிந்த குலத்தவன் இறைவனின் கோயிலின் உள்ளே வருவது தகாது. அத்துடன் உம்மைத் தீண்டுவதும் தகாது. உ  ம தோள் மீது ஏறுவதா! அபசாரம் என்று மறுத்தான்.

ஆனால் முனிவர் அரங்கனின் கட்டளைக்குக் கீழ்ப் படிதலே அடியார்க்குக் கடன் என்பதை எடுத்துக் கூறி திருப்பாணனை சம்மதிக்க வைத்தார்.

உலோகசாரங்க முனிவர் பாணரைத் தன் தோளில் வைத்துத் தூக்கிக் கொண்டு இறைவன் முன் நிறுத்தினார்.

திருவரங்கன் சன்னதியில் நின்ற திருப் பாணன் அவனது அழகிய கோலத்தைப் பாடல்களாகப் புனைந்தான். மக்கள் அனைவரும் திருப்பாணாழ்வார் வாழ்க என்று வாழ்த்தினர்.

மக்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே இறைவனின் திருவடியை வணங்கி அதிலேயே மறைந்து பேரின்ப நிலையை அடைந்தார் திருப்பாணாழ்வார்.

உலோகசாரங்க முனிவர் மனதுக்குள் அழுதார். வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கு சேவை செய்து வந்த தனக்கு நற்கதி கிட்டவில்லையே என ஏங்கினார்.

“உயர்ந்த குலத்தொன் என்ற எண்ணம் சிறிதும் இன்றி திருப்பாணரைத் தூக்கிக் கொண்டு வந்தமையால் உன் அன்பு உள்ளம் புரிகிறது. அதனால் உன்னையும் ஆட்கொண்டோம்” என்று அவருக்கும் பேரின்ப நிலையை அருளினார் இறைவன்.

இறைவன் அன்புருவானவன் அன்பு எங்கிருக்கிறதோ அங்கு இறைவன் இருப்பான். உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்பது இறைவன் முன் கிடையாது.

எல்லாம் உன் அடிமையே. எல்லாம் உன் உடைமையே
எல்லாம் உன் னுடைய செயலே
எங்கணும் வியாபிநீ என்றுசொலும் இயல்பு என்று
இருக்கு ஆதி வேதம் எல்லாம்

சொல்லால் முழக்கியது. மிக்க உப காரமாச்
சொல் இறந்தவரும் விண்டு
சொன்னவையும் இவை நல்ல குருவான பேரும்
தொகுத்த நெறி தானும் இவையே

அல்லாமல் இல்லை என நன்றா அறிந்தேன்.

அறிந்தபடி நின்று.சுகம்நான்
ஆகாத வண்ணமே இவ்வண்ண ஆயினேன்
அதுவும் நினது அருள் என்னவே

கல்லாத அறிஞனுக்கு உள்ளே உணர்த்தினை
கதிக்குவகை ஏ துபுகலாய்
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.” (தா.பா.49)

- அறிவுடைய உயிர்கள் அனைத்தும் உனது அடிமைகள்.
- அறிவில்லாத உலகியல் பொருள்கள் அனைத்தும் உனது உடைமைகள்.
- உலகில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் உனது செயல்கள்.
- எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதும் நீயே, என்பதால் இருக்கு முதலிய வேதங்கள் அனைத்தும் இதையே முழங்கின.
- இதன் துணை கொண்டு பேசாப் பெருநிலையில் நின்ற ஞானிகள் விளக்கிக் கூறியதும் இதுவே.
- குருவாய் எழுந்தருளி வந்தவர்கள் வகுத்தளித்த நெறியும் இதுவேயாகும்.
- இவை அன்றி வேறு உண்மை இல்லை என்பதை நன்றாக அறிந்து கொண்டேன். அறிந்தபடி நின்றேன்.
- ஆயினும் அதனால் பெறும் இன்பம் மட்டும் பெறாதவனாய், அதனைப் பெறாத உ தன்மையுடனே இருந்து விட்டேன்.
- அதுவும் நினது திருவருளே என்று எண்ணி இருக்கையில், கல்வி கல்லாத நுண்ணறிவு இல்லாத, என்னுள் புகுந்து. என்னையும் உணருமாறு செய்தாய்!
- அதனால் உனது திருவடிப் பேற்றுக்கு உரிய வழி வகையையும், நீயே கூறி அருளுவாயாயாக!

"உனது திருவடிப் பேற்றுக்கு உரிய வழி வகையையும், நீயே கூறி அருளுவாயாயாக!" என்று கேட்ட தாயுமானவருக்கு வேதாத்திரியம் வழி சொல்லுகிறது. எப்படி,

## தேர்ந்த வழியில் ஆன்மிகச் சாதனை செய்ய வேண்டும் வேதாத்திரியம்

"மூச்சுபயிற்சியினால் உடல்நலம்
காக்கலாம், முறையாய்ச் செய்தால்,
முழுதுணர்ந்த குரு மூலம் இக்கலையைக் கற்று
அளவாய்ப் பயில வேண்டும்.

பேச்சுப் பிழையில்லா மந்திரங்கள்
உண்டவற்றைப் பிழையாய்ச் சொன்னால்
பெறவிரும்பும் பயன் கிட்டா. சிக்கல்
பல வாழ்வில் எழும். பிழை செய்யாதீர்!

பாச்சுவதும் நிறுத்துவதும் உயிர்க்காற்றைப் பின்
வெளிவிடலும் எளிது அல்ல.
பலகோடி உடல் செல்கள், உயிர் காந்தம்
மன இயல்புக்கு எதிர் மாறான

நீச்சல் அறிவின்மையாம். கற்பனை,
பேராசையாம். நி வைா ய்க் கூர்ந்து

நீங்கள் வேண்டுவதென்ன? நேர்முறை

கண்டதனைப் பழகுவீர்,"(ஞாக.பா.1448)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 4. நான் என்று நீ என்று இரண்டு இல்லை

மயிர்க் கூச்செடுத்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுமோ அவனுக்கு அது தான் கடைசிப் பிறவி.

படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகினுள் நுழையக் கூடாது.

மனிதன் உலகத்தில் வாழலாம். ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக் கூடாது.

சம்சார வாழ்க்கையில் இருந்தால் என்ன? அனைத்தையும் அவனுக்கே அர்ப்பணம் செய்து அவனிடம் சரணமடைந்து விடு.

அதன் பிறகு உனக்கு எவ்விதக் கஷ்டமும் இருக்காது. யாவும் அவனது அருளாலே நடை பெறுகிறது என்பதை அறிவாய்

காந்த ஊசி எப்போதும் வடக்குத் திசையையே காட்டுமாதலால் கடலில் செல்லும் கப்பல்கள் திசை தவறிப் போவதில்லை.

மனிதனுடைய மனம் இறைவனை நாடியிருக்கும் வரையில் அவன் உலக வாழ்க்கையாகிய கடலில் திசை தப்பிப் போக மாட்டான்.

ஒருவர் சிரமப்பட்டு விறகும் பிறவும் தேடி நெருப்பு உண்டாக்குகின்றார். அதன் உதவியால் பலர் குளிர் காய்கின்றனர்.

அது போல மிகவும் சிரமப்பட்டுத் தவம் செய்து இறைவனை அடைந்த மகான்களோடு பழகுவதால் பலர் இறைவனிடத்தில் சுலபமாக மனத்தை வைக்க முடிகிறது. (ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்)

பட்டப் பகல் பொழுதை இருள் என்ற மருளர்தம்
    பட்சமோ எனதுபட்சம்
  பார்த்தவிடம் எங்கணும் கோத்தநிலை குலையாது
    பரமவெளி யாகஒருசொல்

திட்டமுடன் மௌனியாய் அருள்செய்து இருக்கவும்
    சேராமல் ஆராக நான்
  சிறுவீடு கட்டி. அதின். அடுசோற்றை உண்டுஉண்டு.
    தேக்கு சிறி யார்கள் போல

நட்டனைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
    நல் நிலையம் ஆகஉன்னி.
  நான் என்று நீ என்று இரண்டு இல்லை என்னவே,
    நடுவே முளைத்த மனதைக்

கட்ட அறி யாமலே வாடினேன் எப்போது
    கருணைக்கு உரித்தாவனோ?
  கருதரிய சிற்சபையில்ஆனந்த நிர்த்தமிடு
    கருணா கரக்கடவுளே." (தா.பா.50)

- நடுப்பகல் பொழுதை இரவு என்று சொல்லும் அறியாமை (மயக்கம்) உடையவர் பக்கமோ எனது பக்கம்?
- பார்த்த இடங்கள் தோறும் எல்லாப் பொருள்களிலும் பிணைந்து நிற்கும், நிலை தடுமாறாத மேலான வெளிப்படையத்

தன்மையுடைய ஒரு சொல்லை (சும்மா இரு), முறைப்படி மௌனியாய் இருந்து கொண்டு அருளிச் செய்தாய்.

- அவ்வாறு இருக்கவும் உன்னோடு சேராது, வேற யாரோடு சேர்ந்து நான், சிறுவீடு கட்டி,
- அதில் மணல்சோறு சமைத்து, உண்டு,
- தெவிட்டி, நடிக்கும் சிறுவரது செயல் போன்றதொரு நிகழ்வைச் செய்தேன்.
- நடுவுநிலை தவறாது நிற்கக் கற்ற கல்வியும் அறிவும், நல் நிலைபேற உடைய இடமாகக் கருதி.
- நான் என்று, நீ என்று, இரண்டு இல்லை என, மனம் நடுநிலையில் நின்று சொல்ல. அதனைக் கடைபிடிக்க முடியாது, வருந்தி நின்றேன்.
- அவ்வாறிருக்க இனி எப்பொழுது நினது திருவருளுக்கு உரியவன் ஆவேனோ?

## நான் என்று, நீ என்று இரண்டு இல்லை – வேதாத்திரியம்

"நான் யார்?" என்ற கேள்விக்கு உள்
நாடி, உண்மை விடை கண்டோர்,
"நான் நிறைவான பரம்" என்றார்
நாவால் மட்டும்பிறருக்கு
"நான்தெய்வம்" என்றுரைத்து. பதில்
நல்ல உணவைப் பெறுவர் பலர்!
"நான் பிரம்மம்" ஆம் கருத்தறிந்த
நல்லோர் உலகுக்கு ஒளி போல்வர்!" (ஞாக.பா.1132)

நான் யார்? என்ற கேள்வி ஒவ்வொரு மனிதரிலும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுவது இயல்பு.

அகநோக்கு தவப்பயிற்சியின் மூலம், உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்பதை உணர்ந்தவர்கள் "நான் எங்குமே நிறைவான பரம்" என்று உணர்ந்ததை உணர்ந்தவாறு கூறினார்கள்.

ஆனால் வாய் வார்த்தையாக நான் கடவுள் என்று பலரும் கூறி அதற்குப் பிரதியாக நல்ல உணவைப் பெற்று உண்பார்கள்.

இறைநிலையாகிய பிரம்மமே எல்லாமாக ஆகி, எல்லாவற்றிலும் இருப்பாக இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது.

அதுவே நானாகவும் இருக்கிறது என்ற கருத்தை உணர்ந்த நல்லவர்கள் உலகுக்கு ஒளி காட்டும் உயர்வானவர்கள் ஆவர்.

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 5. பொய்யும் மெய்யும்

சமாதானத்தை உண்டாக்கும் பொய்யா?, சச்சரவுகளை உண்டாக்கும் மெய்யா? எது மேலானது?

வேற்று நாட்டைச் சேர்ந்த, வேறு மொழி பேசுகிற குற்றவாளிகளைப் பிடித்து வந்தவர்கள், அவர்களின் குற்றங்களை விளக்கிச் சொல்லச் சொல்ல, அரசர் தண்டனை விதித்துக் கொண்டிருந்தார்.

ஒருவருக்கு, அரசர், தூக்குத் தண்டனை வழங்கியபோது, அந்தக் கைதி, அவர் மொழியில், மன்னரை மோசமாகத் திட்டினார்.

அவர் சொல்வது புரியாது, அருகில் இருந்த அமைச்சரிடம் மன்னர் விளக்கம் கேட்க, அமைச்சர் அவரிடம், ''அரசே, கோபத்தை அடக்கி பிறரை மன்னிப்பவர்க்குச் சொர்க்கம் உண்டு என்கின்றான்', என்றார்.

அரசர் உடனே மனம் மாறி, தூக்குத் தண்டனையை மாற்றி மன்னித்துவிட்டார்.

பக்கத்தில் நின்றிருந்த மற்றோர் அமைச்சர் அரசர் காதில், ''அரசே! இந்த அமைச்சர் உங்களிடம் பொய் சொன்னார். அந்தக் கைதி உண்மையிலேயே உங்களை மிகவும் திட்டினான்'' என்றார்.

அரசர் புன்னகையோடு அவரிடம், ''நீங்கள் கூறிய உண்மையை விட, அவர் கூறிய பொய் எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. சமாதானத்தை உண்டாக்கும் பொய், சச்சரவுகளை உண்டாக்கும் மெய்யை விட மேலானது' என்று சொன்னார்.

மெய்விடா நாஉள்ள மெய்யர் உள் இருந்துநீ
மெய்யான மெய்யை எல்லாம்
மெய் என உணர்த்தியது மெய். இதற்கு ஐயம்இலை.
மெய்ஏதும் அறியாவெறும்

பொய்விடாப் பொய்யினேன் உள்ளத்து இருந்து, தான்
பொய்ஆன பொய்யை எல்லாம்
பொய் எனா வண்ணமே புகல வைத்தாய் எனில்
புன்மையேன் என்செய்குவேன்.

மைவிடாது ஏழுநீல கண்டகுருவே விஷ்ணு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறை ஓதும் நான்முகக் குருவே
மதங்கள்தொறும் நின்ற குருவே

கைவிடாதே என்ற அன்பருக்கு அன்பாய்க்
கருத்தூடு உணர்த்து குருவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.” (தா.பா.51)

- மெய்யை விட்டு நீங்காத நாவினை உடைய மெய்யன்பர் தம் உள்ளத்தில் இருந்து,
- நீ மெய்யன்பர் தம் உள்ளத்தில் இருந்து,
- நீ மெய் என்று சொன்ன மெய்யை எல்லாம்,
- மெய் என்று உணருமாறு செய்தது மெய்யே.
- இதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.
- மெய் எதனையும் அறியாது.
- பொய்யான உலகைப் பற்றி நிற்கும் பொய்யனாகிய என் உள்ளத்தில் எழுந்தருளி, பொய் எனப்படும் பொய்யை எல்லாம் பொய் என்று அறியாவண்ணம் மெய் எனவே நினைக்குமாறு செய்துவிட்டாய்.
- இதனால் ஏமாந்துபோன இழிதகைமை உடையவனாகி நான், இதிலிருந்து மீள என்ன செய்வேன்??

## மெய்ப்பொருளை அறிவே விளக்கும் – வேதாத்திரியம்

"அத்துவிதம், துவிதம், சத்து சித்தானந்தம்,
    அகம் உணர்ந்தோர் விரித்துரைக்க விசிட்டாத் வைதம்
இத்தனையும் அறிவுஉயிர் பரம் உணர்ந்தால்
    இணைந்தஒரே கருத்தாக விளக்க மாகும்.
சித்தநிலை உணர்ந்தோர்கள் உதிர்த்த சொற்கள்.
    சிறப்பறியாரால் விளக்கம் செய்படுங்கால்
எத்தனையோ குழப்பங்கள் உண்டு பண்ணும்.
    இறையுணர்வீர்! உம்மறிவே விளக்கம் கூறும்." (ஞாக.பா.1125)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. பண்ணேன் உனக்கான பூஜை

மனத்தின் வேகம் எவராலும் கணிக்க முடியாதது. எந்தச் செயலையும் ஒரு கணத்தில் மனக்கண் முன் நிறுத்தும் வலிமை பொருந்தியது.

அத்தகைய மனத்தை மெள்ள நிறுத்தி, ஒவ்வொரு செயலாகக் காண வைப்பது அரிய செயல். அத்தகைய செயலைப் பூசலார் செய்யத் துணிந்தார்.



அந்த ஊரில் லிங்கத் திருமேனியாக எழுந்தருளியிருந்த ஈசனுக்குக் கூரையில்லை. வெயிலும் மழையும் அவன் மேல் விழுந்து தெரித்தன. அதைக் கண்டும் காணாமல் இருந்த அடியவர்கள் பலர்.

ஆனால், ஒருவரால் அவ்வாறு செல்ல முடியவில்லை. அகிலம் படைத்த அந்த ஆலவாயனுக்கு ஓர் ஆலயம் எழுப்ப விரும்பினார்.

கையில் செல்வம் இல்லாததால், செல்வத்தை தேடித்தி ரிந்தார். திருப்பணிக்காகக் கைகளை ஏந்திய அந்த அடியவருக்கு, அள்ளிக் கொடுக்க அல்ல கிள்ளிக் கொடுக்கக்கூட ஒருவரும் இல்லை.


மனமும் உடலும் சோர்ந்து நின்றபோது, ஈசன் அவரது மனத்தில் தன் திருமேனி தோன்ற நின்றார். 'புறத்தே கோயில் எழுப்பத்தானே பொருள் தேவை. இனி அகத்தே அவனை நிறுத்திக் கோயில் செய்குவோம்' என்று முடிவு செய்தார்.

அந்த அடியவர், பூசலார் என்னும் நாயன்மார். திருநின்றவூர் திருத்தலத்தில் வாழ்ந்து வந்த பூசலார் இளம் வயதுமுதல் இறைவன் மேல் பெரும் பக்தி கொண்டவராக இருந்தார்.

அன்றாடம் அவர் சென்று வணங்கும் லிங்கத் திருமேனிக்குத் திருக்கோயில் கட்ட அவர் விரும்பினார். அது இயலாமல் போகவே, மனத்தில் கோயில் கட்ட முடிவு செய்தார்

மறையவர் குலத்தில் தோன்றிய அந்த மகான். மனத்தின் வேகம் எவராலும் கணிக்க முடியாதது. எந்தச் செயலையும் ஒரு கணத்தில் மனக்கண் முன் நிறுத்தும் வலிமை பொருந்தியது.

அத்தகைய மனத்தை மெள்ள நிறுத்தி, ஒவ்வொரு செயலாகக் காண வைப்பது அரிய செயல். அத்தகைய செயலைப் பூசலார் செய்யத் துணிந்தார்.



நாளும் ஒரு பணி. ஒருநாள் இடத்தை சுத்தம் செய்வார். ஒருநாள் கட்டுவதற்கான பொருள்களைக் கொண்டுவந்து சேர்ப்பார்.

மெள்ள மெள்ள ஒவ்வொரு கல்லாக அடுக்கிக் கோயிலை எழுப்புவார்.

நிஜத்தில் ஒரு கோயில் எழுப்பும் பணி நடைபெறுவது போலவே அன்றாடம் அவர் மனத்தில் பணிகள் நிகழும்.

ஒவ்வொரு நாளும் சிவபூஜை முடிந்ததும் மீண்டும் திருக்கோயில் பணிகளில் மனத்தைச் செலுத்தி விடுவார்.

ஒருநாள் கோயில் திருப்பணிகள் மனதுக்குள்ளேயே முடிந்துவிட்டன.

இனி கும்பாபிஷேகம் செய்து இறைவனைக் குடிகொள்ளச் செய்துவிட்டால் போதும். அதற்கு ஒரு நல்ல நாள் குறித்தார். அந்த நாளுக்காகக் காத்திருந்தார்.

இதே காலத்தில், காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த பல்லவ மன்னன் ஒருவன் ஈசனுக்குக் கோயில் எழுப்பினான்.

மிகவும் பிரமாண்டமாக எழும்பிய அந்தக் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்ய நாள் குறித்தான்.

அன்றைய இரவு அவன் உறங்கும்போது அவன் கனவில் இறைவன் தோன்றினார்.

'திருநின்றவூரில் வாழும் என் பக்தனான பூசலார் கட்டிய திருக்கோயிலில், நீ குறித்த அதே நாளில் கும்பாபிஷேகம். அன்று நான் அங்கே குடிகொள்ளப் போகிறேன். எனவே, நீ கும்பாபிஷேகம் செய்ய வேறு ஒரு நாள் குறித்துக்கொள்' என்று சொல்லி மறைந்தார்.

மன்னனுக்கோ ஆச்சர்யம். 'தான் எழுப்பியிருக்கும் கோயிலைவிட அந்த பூசலார் எழுப்பிய கோயில் எத்தனை உயர்ந்ததாக இருந்தால் ஈசன் அங்கு குடிகொள்ள முடிவுசெய்வார். உடனே அந்த ஆலயத்தைக் காண வேண்டும்' என்று விரும்பி, மறுநாள் சூரிய உதயமானதும் திருநின்றவூருக்குக் கிளம்பினான்.

மன்னன் தன் பரிவாரங்களோடு அந்த ஊரை அடைந்தான். அங்கு கோயில்கள் எதுவும் புதிதாகக் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யத் தயாராக இல்லை என்பதை விசாரித்து அறிந்தான்.



ஈசன் உச்சரித்த 'பூசலார்' என்னும் திருப்பெயர் நினைவுக்கு வந்தது. பூசலார் இருப்பிடம் விசாரித்து, அங்கு சென்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான். கனவில் அந்த கனகசபேசன் சொன்னவற்றைச் சொல்லி, விளக்கம் கேட்டு நின்றான்.

பூசலாருக்கோ சொற்கள் எழவில்லை. மாறாகக் கண்ணீர் பெருகியது. பிள்ளை விளையாட்டு போல தான் கட்டிய மனக் கோயிலைப் பெரிதென மதித்து, அந்த பிறைசூடன் குடிகொள்ள விரும்பியதை எண்ணிப் பூரித்தார்.

பின்பு மன்னனிடம், “மன்னா, நான் கோயில் எழுப்பியது உண்மைதான். அதில் கும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்ததும் உண்மைதான்.

ஆனால், அது புறத்தே எழுப்பிய கோயில் இல்லை. என் அகத்தே என் இறைவனுக்கு எழுப்பிய அந்தரங்கமான கோயில். அதில் என் இறைவன் வந்து வாசம் செய்ய முடிவு செய்தார் என்று கேட்கும் போதே எனக்கு சிலிர்க்கிறது” என்று சொல்லி பணிந்து நின்றார்.

பூசலாரின் சொல் கேட்டு வியந்த மன்னன், இறைவனின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டான்.

அவன் விரும்புவது பக்தர்களின் மனக் கோயிலையே என்று தெரிந்து கொண்டான்.

பூசலாரின் பக்தியை மெச்சி அவரைப் பணிந்து கொண்டான். அவர் உத்தரவைப் பெற்று தன் ஊர் திரும்பிச் சென்றான்.

பூசலார் தன் மனக் கோயிலில் கும்பாபிஷேகம் செய்தார். தான் வாழும் காலம் வரை ஆகம விதி வழுவாமல் பூசை செய்தார்.

அதன் பலனாக, ஒரு ஐப்பசி மாத அனுஷ நட்சத்திர தினத்தில் அந்த ஆடலரசனின் திருவடியை அடைந்தார்.

பண்ணேன் உனக்கான பூஜை ஒரு வடிவிலே
பாவித்து இறைஞ்ச, ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்
பனிமலர் எடுக்க மனமும்

நண்ணேன், அலாமல்இரு கைதான் குவிக்க எனின்
நாணும். என உளம் நிற்றிநீ.
நான் கும்பி டும் போது அரைக்கும்பிடு ஆதலால்
நான்பூஜை செய்யல் முறையோ?

விண்ணே விண் ஆதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேஅ வித்தின் முளையே

கண்ணே கருத்தே என் எண்ணே எழுத்தே
கதிக்கு ஆன மோனவடிவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே." (தா.பா.52)

- நான் உன்னை நினைந்து, வழிபாடு எதுவும் செய்யவில்லை
- ஒருவயைால் ஆழமாக சிந்தித்து, வணங்க நினைத்து, மலர் பறிக்க முறப்படின் அம்மலரில் நீயே இருக்கிறாய்.
- ஆகையால் அந்த குளிர்ந்த மலரைப் பறிக்க மனம் ஒப்புவதில்லை.
- அது அன்றி இரண்டு கைகளையும் தலைமேல் கூப்பி வணங்கலாம் என்றால், அதற்கும் தயங்குகிறேன்.
- ஏனெனில், என் உள்ளத்தில் நீ நிற்பதால், நீ பாதி, நான் பாதியாக, என் கும்பிடு அரைக் கும்பிடு ஆகிவிடும். ஆதலால் நான் உன்னை வழிபடுவது முறையான செயல் ஆகுமோ?

## வேதாத்திரியம் தரும் இறைவழிபாடு

இயற்கையின் இருப்பை உணர்தல், முயற்சியை நல்ல முறையிலே, வெற்றியான வழியிலே செலுத்துதல், உயிர்களுக்குத் தீமை இல்லாத முறையில் ஆக்கத் துறையில் வாழ்வை செலுத்திக் கொள்வது என்பது 'அறம்'.

மற்றொன்றான அகம் நோக்கிச் செய்யும் இறை வழிபாட்டைத்தான் 'தவம்' ([illegible] [illegible] [illegible]) என்று சொல்கின்றோம்.

எந்த மெய்ப்பொருளை, எந்த உண்மையை உணர்ந்து எந்த இயற்கை வழிபாட்டை உணர்ந்து அதை மதித்து நடக்கின்றோமோ, அதை நினைவில் வைத்துக் கொள்கின்றோமோ, அதை எப்பொழுதும் விழிப்போடு பார்த்துக் கொள்கின்றோமோ, அது தான் 'இறைவழிபாடு'.

இயற்கை என்பது மனிதன் அறிவுக்கும் வாழ்வுக்கும் ஏற்றமளிக்கும் ஒரு மாபெரும் ஆற்றலுடைய தத்துவம் இது:

1) இருப்பு நிலையான ஆதியில் இறைவெளியாக,
2) இயக்க மூலமான ஆற்றலில் விண்துகளாக,
3) விண்துகள்கள் கூடிய கூட்டு இயக்கத்தில் பஞ்சபூதங்களும் அவை கூடிய அண்டங்கள் பலவாக,
4) இயற்கையின் விளைவுகளை உணரும் ரசிக்கும் நிலையில் ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரையிலும் நான்கு நிலைகளிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

.

இயற்கையின் பெருமையை, சிறப்புகளை, விளைவுகளை உணர்ந்து கொள்ள மனிதன் எடுக்கும் முயற்சியில் மன அலைச்சுழல் (□□□□□□ □□□□□□□□□) விரைவைக் குறைத்து, அலைகள் - நிலையாக,

அதுவே - அறிவாக, அதையே - தானாக, அவ்வறிவாக இருக்கும் பேராற்றலே எல்லாம் வல்ல இறைவெளியாக, உணர்ந்து முழுமை பெறும் முயற்சிதான் 'தவம்' (குண்டலினி யோகம் - □□□□□□□□□□ □□□□□□□□□ □□□□) ஆகும்.

தவத்தால் கண்ட உண்மைகளை மறவாமல் வாழ்வில் ஒழுகி தனக்கும் பிறர்க்கும் ஆக்கமே தரும் வழியில் ஒத்தும் உதவியும் வாழும் நெறியே 'அறம்' ஆகும்.

'தவமும் அறமும்' இறைநிலையுணர்ந்து அவ்வழியே வாழத் திறமையளிப்பதால் இவையே “இறைவழிபாடு” எனப்படுகின்றது.

மனிதனை இன்ப துன்பச் சுழலால் பாதிக்கப்படாத அமைதி நிலைக்குக் “குண்டலினி யோகம்” (□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□) உயர்த்துகிறது.

உணர்வோம் வளமோடு வாழ்வோம்.

## முழுமையும் அமைதியும்– வேதாத்திரியம்

“அறிவுஆறாம் நிலையை எய்த பின்னர்
    அதுமுழுமை பெற்றுத் தனையறியும் மட்டும்
அறிவுக்கு அமைதிகிட்டா; அவ்வப்போது
    அதுதேவை, பழக்கம், சூழ்நிலைகட் கொப்ப
அறிவேதான் காம முதல் ஆறுகுணங்கள்
    ஆகிவிளைவாய் இன்பதுன்பம் துய்த்து
அறிவுதன் மூலநிலை நோக்கி நிற்கும்
    அதன்பிறகே முழுமைபெறும் அமைதி உண்டாம்.”(ஞாக.பா.1229)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம்.

ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.




## 7.சகமீது இருந்தாலும் மரணம் உண்டு

**மரணமில்லாப் பெருவாழ்வு கண்ட மகான்!** இவ்வுலகத்தில் ஆறறிவுள்ள உயிர் உடைத்தாகிய தேகத்தைப் பெற்ற வள்ளலார் தேகத்திற்கு இடையிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் ஆகிய அனைத்தையும் நிவர்த்தி செய்து கொண் டு அ ந் த் தேகத்தையே நித்திய தேகமாக்கத் திருவுள்ளம் கொண்டார் வள்ளலார்.



அனைவரும் வியக்கும் வண்ணம் தான் அறிவித்தபடியே ஒளி உடலாக மாறி, நித்திய தேகியாக இருக்கிறார்.

சரித்திரம் அறிவியல் பூர்வமாகக் கண்ட உண்மை இது.

அவர் மரணமில்லாப் பெருவாழ்வைச் சித்திக்கலாம் என்று சொல்லில் மட்டும் சொல்லாது அதைச் செய்து காட்டிய மாபெரும் மகான்.

பசிப் பிணி நீக்குதல் முதல் தர்மம் என்றார் அவர்.

இந்த தேகத்தைப் பிணியிலிருந்து விடுவித்து ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழப் பல அறிவுரைகளையும், குறிப்புகளையும் அவர் தந்துள்ளார்.

ஆன்மீகத்தோடு ஆரோக்கியத்தையும் நீண்ட வாழ் நாளையும் பெற விரும்புவோர் நாட வேண்டிய ஒரே சந்நிதானம் வள்ளலார் சந்நிதானம் தான்.

அவரது ஏராளமான சிறு சிறு குறிப்புகள் ஒவ்வொன்றும் நீண்ட வாழ்நாளையும் ஆரோக்கியத்தையும் பெறுவதற்கான இரகசியங்கள்.

ஏராளமானோரை பல்வேறு வியாதிகளிலிருந்து அவர் குணப்படுத்தியுள்ளார்.

எடுத்துக்காட்டாக தொழுவூர் வேலாயுத முதலியார் கூறியுள்ள இரு நிகழ்ச்சிகளை மட்டும் இங்கு குறிப்பிடலாம்.

கருங்குழியில் இருந்த பாலு ரெட்டியார் என்பவர் குஷ்ட நோயினால் துன்பமுற்றார். அவர் சுவாமிகளை அணுகவே வள்ளலார் திருநீறு கொடுத்து அதைத் தீர்த்தார்.

முத்து நாராயண ரெட்டியார் என்பவருக்கு கண் பார்வை பாதிக்கப்படவே அவரது கண் மறைவினையும் தீர்த்தருளினார்.

இது போல அவர் நோய் தீர்த்த சம்பவங்கள் ஏராளம்.

அனைவரும் அனுசரிக்க வேண்டிய எளிய குறிப்புகளை அவர் தொடர்ந்து வலியுறுத்திய வண்ணம் இருந்தார்.

சூரியோதயத்திற்கு முன்னர் எழுந்திருப்பதை அவர் வெகுவாக வலியுறுத்தினார்.

"புத்தி அதற்குப் பொருந்தும் தெளிவளிக்கும்
சுத்த நரம்பினறற் றூய்மையுறும் – பித்தொழியும்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னுமதி
காலை விழிப்பின் குணம்"

என்று பதார்த்த குண சிந்தாமணி காலை எழுந்திருப்பதன் பலன்களைக் கூறுகிறது.

புத்தி மனதுடன் பொருந்தும்.

தெளிவு உண்டாகும்.

நரம்புகள் எல்லாம் தூய்மை அடையும்.

பித்தம் ஒழியும். வாத பித்த சிலேத்துமங்கள் தம் தம் நிலையில் சேரும்.

இது அதிகாலை எழுந்திருப்பதன் பலன்.

பகல் உணவுக்குப் பின் சிறிது துயில் கொள்ள வேண்டும். இந்த உறக்கம் ஆழ்ந்த உறக்கமாக இருக்கக் கூடாது. சற்றுப் படுத்து எழுந்திருப்பதாக மட்டுமே அமைய வேண்டும்.

இரவு உணவுக்குப் பின்னர் சற்று உலாவ வேண்டும்.

சத பதம் என்று ஆயுர் வேதம் கூறும். உணவுக்குப் பின்னர் நூறு அடிகள் நட என்பது அறவுரை.

புலாலைப் புசிக்காதே – எந்நாளும்.

சன்மார்க்க உணவை எடுத்துக் கொள். (இதைப் பற்றி மிக விரிவாக அவர் எழுதியுள்ளார்)

இவையெல்லாம் அவரது அறிவுரைகள்.

மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறுதலை மனிதனின் குறிக்கோளாகச் செய்வதற்கென அபூர்வமாக தமிழகத்தில் அவதரித்த சித்தர் வள்ளலார்.

சந்ததமும் வேதமொழி யாது ஒன்று பற்றினது
தான்வந்து முற்றும் எனலால்,
சகமீது இருந்தாலும் மரணம் உண்டு என்பது
சதாநிட்டர் நினைவதில்லை.

சிந்தை அறி யார்க்கு ஈது போதிப்பது அல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்.
திவ்யகுண மார்க்கண்டர். சுகர் ஆதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யர் அலரோ?

இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர்,
இருக்காதி வேதமுனிவர்,
எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள்
இரவிமதி ஆதியோர்கள்,

கந்தருவர், கின்னரர்கள், மற்றையர்கள் யாவரும்
கைகுவித் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.” (தா.பா.53)

- எப்பொழுதும் எந்த ஒன்றை நினைத்துக் கொண்டு இருக்கிறோமோ, அதுதானே வந்து கைகூடும்” என்பது மறைமொழி.
- இருப்பினும் எப்பொழுதும் தியானத்தில் இருப்பவர் இந்த உலகில் இருந்தாலும், தங்களுக்கு மரணம் உண்டு என்பதை அவர்கள், நினைத்துப் பார்ப்பது இல்லை. (ஏனெனில் அவர்களுக்கு மரணம் ஏற்படுவதில்லை)
- இதனை அறியாதவர்க்கு அறிவுறுத்த முற்படின், பேச்சு நீண்டு தர்க்கமாய் முடியும்.
- தெய்வத்தன்மை பொருந்திய மார்க்கண்டர், சுகர் முதலிய முனிவர்கள் சித்தாந்த முத்தி பெற்று, நிலைத்து வாழ்பவர் (சிரஞ்சீவி) அல்லரோ?

மரணமில்லா நிலை – வேதாத்திரியம்

“மனம் புலன் உணர்வினில் மயங்கிட மாயை ஆம்.
மனம் உயர் வெளியினில் மருவித் தோய்ந்திட!
மனம் விரிந்து அறிவெனும் மாபதம் எய்திடும்!
மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே.

மனம் மாய என்பார்கள் மனநிலை மாற்றத்தை,
மனம் மாய்வதே இல்லை, மனம் மெய்ப்பொருளாகி,
மனமே அறிவாக மறுபிறப்பு எய்திடும்!
மனம் அறிவான பின் மரணமில்லா நிலை!

மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ!
மனமதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே!
மனமதை உயர்ந்தினால் மட்டில்லா இன்பமாம்!
மனத்திலே உளஎல்லாம், மற்றெங்குத் தேடுவீர்?

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 8. சதாகால பூஜையா ஒப்புவித்தேன்

பகலிலும் சூரிய ஒளி உள்ளே வராத அளவு ஓர் அடர்ந்த காடு அது. அதன் வழியே நான்கு வழிபோக்கர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அதில் ஒருவன் தீவட்டி ஏந்தியவன். அவன் பின் பூக்கூடையை ஏந்தியவன். அதற்கடுத்து ஒரு வண்ணான். கடைசியாக ஒரு சந்நியாசி.

இவர்கள் சென்று கொண்டிருக்கும்போது மரங்கள் விலகியவுடன் படிகளுடன் கூடிய குளம் ஒன்று தெரிந்தது.
வெளிச்சம் வந்து குளத்தில் நீரைக் கண்டதும் தீவட்டி ஏந்தியவன் அதை நீரில் அணைத்து விடுகிறான்.

பூக்காரனோ, பூக்கள் வாடி விடாமலிருக்க நீர் தெளித்து அவற்றைப் பார்த்துக் கொள்கிறான்.

வண்ணானோ, துணிகளைத் துவைத்துக் கொண்டிருக்கிறான்.

சந்நியாசியோ, அதில் மூழ்கி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஜபமும் தியானமும் செய்கிறார்.

பரப்பிரம்மம் என்பதும் ஒரு குளம் போல் யாவருக்கும் பொதுவானது.

பல சமயங்களும் தங்களுக்கேற்ற உருவங்களை விரும்பி வணங்கி வருகிறது.

உருவமற்ற பரப்பிரம்மத்தை உருவம் கொடுத்து வணங்குவது மனித மனமே. மனம் என்பது அடர்ந்த காடு.

காம, குரோத, லோப, மத, மாச்சர்யம் என்னும் கெட்ட குணங்கள் உள்ளிருக்கும் ஆத்மாவைத் திரை போல் மறைத்துக் கொண்டிருக்கின்றன.

குளம் என்பது பகவானின் கருணை, கருணை எல்லோருக்கும் பொதுவானதுதானே.

படிகள் யாவும் சமயங்களையும் குறிக்கும் என்று கொள்ளலாம்.

ஆத்ம சாதகர்களாக வழிப் போக்கர்களை எடுத்துக்கொ ள்ளலாம். தீவட்டி ஏந்தியவன் அவனது பக்குவத்திற்குத் தகுந்தவாறு, அவன் தேவை முடிந்தவுடன் தீவட்டியை அணைத்து விடுகிறான்.

பூக்காரனோ அவ்வப்போது பகவானை நினைத்துத் தன்னை தூய்மைபடுத்திக் கொள்கிறான்.

வண்ணானோ, துணிகளைத் துவைத்து அழுக்குகளைப் போக்குவது போல் தியானித்துத் தன்னை புதுப்பித்துக் கொள்கிறான்.

சந்நியாசியோ, பகவானிடத்தில் தன்னை முழுமையாக ஒப்படைத்து சரணாகதி மூலமாகத் தன் பிறவிச் சுழலை முடித்துக் கொள்கிறார்.

சரணாகதியில் இரண்டு தினுஸு சொல்வதுண்டு:'மர்கட கிசோர ந்யாயம்' என்றும். மர்கட கிசோரம் என்றால் குரங்குக் குட்டி, மார்ஜார கிசோரம் என்றால் பூனைக்குட்டி.



குரங்கு ஜாதியில் குட்டிதான் தாயைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும். அப்படி பக்தன் தன் முயற்சியால் பகவானைப் போய்ப் பிடித்துக் கொள்ளணும் என்பது மர்கட கிசோர ந்யாயம்.

பூனை ஜாதியைப் பார்த்தாலோ, குட்டி தன்னை ரக்ஷித்துக்கொள்ள வேண்டும் என்ற கவலையே இல்லாமல் அது பாட்டுக்குக் கிடக்கிறது.

தாய்ப் பூனைதான் அதை வாயால் கௌவிக் கொண்டு இடம் இடமாக எடுத்துப் போகிறது. இப்படி ஸ்வய ப்ரயத்னம் இல்லாமல் பகவானே பார்த்துக் கொள்ளட்டும் என்று இருப்பதுதான் மார்ஜார கிசோர நர்யம்.

பகவானிடத்திலே தன்னை பூஜை, தியானம் மூலமாக முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள வேண்டும்.

இதை சரணாகதி என வைணவம் கூறுகிறது.. மர்கட பக்தியைப் போல இறைவனின் பாதத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தால் அவன் அனைத்தையும் பார்த்துக் கொள்வான்.

துள்ளும் அறி யாமனது பலிகொடுத் தேன்.கர்ம
துஷ்ட தேவதைகள் இல்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன்அன்பு அபிஷேகநீர்.

உள் உறையில் என் ஆவி நைவேத்தியம் ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம்

ஒருகாலம் அன்று இது சதாகால பூஜையா
ஒப்புவித் தேன். கருணைகூர்

தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்யரசம் யாவும் திரண்டு ஒழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே

கள்ளன் அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லஉறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே." (தா.பா.54)

- அடியேன் எனது தளும்புகின்ற மனத்தை நினது முன்னிலையில் பலிகொடுத்து விட்டேன்.
- அதனால் வி ளைக ளாகிய கொடிய தேவதைகள் இப்பொழுது என்னிடம் இல்லை. (மனம் இல்லை. எனவே வினை இல்லை)
- துரியத்தில் சாந்தமே வடிவாய் வீற்றிருக்கும் உனக்கே நான் அடிமை.
- என்னுடைய அன்பே திருமஞ்சன நீர், என்னுள் உறையும் உயிரே திருவமுது,
- உயிர்ப்பே மணம் கமழும் தூபதீபம்,
- அறிவே ஒளி,
- இப்படியாகச் செய்யும் அகவழிபாடு ஒருமுறை அன்று
- பலமுறை. அதாவது எல்லாக் காலங்களிலும் நிகழும் வழிபாடாக நினது திருவடிக்கு ஒப்படைத்தேன்.

## சரணாகதி வேதாத்திரியம்

இறைநிலையிடம் தன்னை முழுமையாகக் கொடுத்து சரணாகதியாகிறார் தாயுமானவர். சரணாகதி என்னும் சாந்தநெறி பற்றி வேதாத்திரியம் பேசுகிறது.

இறைநிலையை அடைக்கலமாக் கொண்டு, தன்னை இறைநிலைக்கு ஒப்புக்கொடுத்துப் பணிதல் சரணாகதி எனப்படும்.


இறைநிலையே தன் நிலையில் மாற்றம் பெற்று அனைத்து பிரபஞ்சத் தோற்றங்களுமாகியுள்ளது.

அதனால் எல்லாவற்றிலும் இருப்பாக இயக்கமாக, விளைவாக செயல்படுகிறது.

“தனையடக்கித் தலைவனையே
முன்வைத்து, ஒழுகும் நெறி
சரணா கதியெனும்
சாந்தநெறி. இந்நெறியில்

தனைத் தலைவனாய் காணும்
தன்மை இயல்பாய் வளரும்.
தருக்கொழியும். ஆசிரியன்
தவக்காப்பி ல உயிர் உய்யும்.” (ஞாக.பா.802)

மனிதன் ஐந்து புலன் உணர்வுகளையும் அடக்கி அறிவு என்பதை உணர்ந்து, அந்த அறிவே பேரறிவாக எல்லாவற்றிலும் உள்ளது என்பதை உணர வேண்டும். அதுவே பிறவியின் நோக்கமாகும்.


தனையடக்கித் தலைவனையே முன்வைத்து ஒழுகும் நெறி சரணாகதிஎனும் சாந்தநெறி

தன் முனைப்பை நீக்கி இறைநிலையாகிய தலைவனையே முன் வைத்து, இறைமுனைப்பில் வாழ்கின்ற வாழ்வியல் நெறி சரணாகதி என்னும் அமைதி நெறியாகும்.

இந்த நெறியில் வாழும் மனிதர்க்குத் தனது உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்ற உண்மைகள் உணரப்படும்.

தன்னிலே எல்லாவற்றையும், எல்லாவற்றிலும் தன்னையும் காணும் தன்மையானது இயல்பாகவே வளரும்.

ஆணவம் என்னும் அகங்காரம் ஒழியும். இக்கலையைக் கற்றுக்கொடுத்த ஆசானின் தவக்காப்பின் மூலம் உயிர் ஈடேறி உய்யும்.

ஆகவே தன்முனைப்பை ஒழித்து இறை முனைப்பில் தன்னையே இறைநிலையாக உணரும் சரணாகதி என்னும் சாத்வீக வாழ்வின் மூலம் அகங்காரம் ஒழித்து ஆசானின் தவ காப்பின் மூலம் உயிர் ஈடேறும்.

நாமும் அந்த இறைநிலையிடம் சரணாகதி அடைந்து ஆனந்தமாக வாழ்வோமாக.

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 9 அன்பர் அன்புக்கு எளியை

ஓர் இளம் தாய் தெரு வழியாகச் சென்று கொண்டிருக்கிறாள். அவளைப் பார்த்து ஒரு நாய் குரைக்கிறது. அவள் பயந்து அருகிலுள்ள வீட்டில் தஞ்சம் புகுகிறாள்.

மறுநாள் அதே தாய் தன் குழந்தையுடன் சென்று கொண்டிருக்கிறாள். திடீரென ஒரு சிங்கம் அவள் குழந்தையின் மீது பாய்கிறது.



அவள் அப்போது என்ன செய்வாள்? சிங்கத்தின் வாயில் தன்னை அர்ப்பணித்தாவது அவள் குழந்தையைக் காப்பாற்றுவாள் அல்லவா?

இவ்வுதாரணத்தைக் கூறி சுவாமி விவேகானந்தர் உண்மையான அன்பின் இலக்கணத்தை விளக்குகிறார்:

அன்பு பயம் அறியாதது. பயத்திற்குக் காரணம் சுயநலநோக்கம் தான். சுயநலத்திற்கும், சிறுமைத்தனத்திற்கும் அடிமைப்படும் அளவிற்கு பயம் அதிகரிக்கிறது.

தான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று ஒருவன் நினைப்பானேயானால் பயம் அவனைப் பற்றிக் கொள்வது நிச்சயம்.

தான் அற்பன் என்ற எண்ணம் குறையக் குறைய பயமும் குறையும். துளியளவு பயம் இருந்தால்கூட அங்கே அன்பு இருக்க முடியாது.

அன்பும், பயமும் இணைந்து இருக்க முடியாதவை. கடவுளை நேசிப்பவன் அவரிடம் பயப்படக்கூடாது.

பயத்தின் காரணமாக இறைவனை நேசிப்பவர்கள் மனிதர்களில் கடைப்பட்டவர்கள்.; பக்குவப்படாதவர்கள். தண்டனை கிடைக்கும் என்ற பயத்தினால் இவர்கள் இறைவனை வழிபடுகிறார்கள்.

இப்படி தண்டனைக்கு பயந்து இறைவனை வழிபடுவது, வழிபாடு என்பதையே தரம் தாழ்த்துவதாகும்.

அத்தகைய வழிபாடு சற்றும் பக்குவப்படாத தாழ்ந்தநிலை வழிபாடாகும்.

மனத்தில் பயம் இருக்கும்வரை அங்கே அன்பு எப்படி வர முடியும்?

பயங்கள் அனைத்தையும் வெற்றி கொள்வது அல்லவா அன்பின் இயல்பு!...கடவுள் மீது நாம் கொள்கின்ற பயம் மதத்தின் துவக்கமே;

அவர் மீது கொள்ளும் அன்பே மதத்தின் முடிவு. இங்கு பயம் அனைத்தும் ஓடிவிட்டது. அன்பின் மூலம் வழிபாடு செய்வதே உண்மையான ஆன்மிக வழிபாடு.

கடவுள் இரக்கமுள்ளவரா என்ற கேள்வியே இங்கு எழுவதில்லை. அவர் கடவுள், அவர் எனது அன்பர். அவர் எல்லாம் வல்லவரான சர்வ சக்தி வாய்ந்தவரா, ஓர் எல்லைக்கு உட்பட்டவரா, உட்படாதவரா என்ற கேள்விகளுக்கும் இங்கே இடமில்லை.

அவர் நல்லது செய்தால் நல்லது. தீமை செய்தாலும் அதனால் என்ன? எல்லையற்ற அந்த அன்பைத் தவிர மற்ற எல்லா குணங்களும் மறைகின்றன...

கடவுளே அன்பு, அன்பே கடவுள்...தெய்வீக அன்பாக மாறிவிடுவதுதான் உண்மையான வழிபாடு..

அன்பின் உருவமாக எண்ணி அவரை வழிபடுங்கள். எல்லையற்ற அன்பு என்பதே அவரது பெயர். இது ஒன்றே அவரைப் பற்றிய விளக்கம்...

தகப்பன் அல்லது தாய்க்குக் குழந்தையின்மீது உள்ள பாசம், கணவனுக்கு மனைவிமீதும், மனைவிக்குக் கணவன்மீதும் உள்ள காதல், நண்பர்களுக்கிடையே உள்ள நட்பு இவையனைத்தும் ஒன்றாகத் திரண்ட பேரன்பைக் கடவுள் மீது செலுத்தவேண்டும்...

கடவுள் மீது நாம் அன்பு செலுத்த வேண்டிய முறை இதுவே:

எனக்கு செல்வம் வேண்டாம், உடைமை வேண்டாம், கல்வி வேண்டாம், முக்தியும் வேண்டாம்...

ஆனால் ஒன்றுமட்டும் அருள்வாய் நான் உன்னை நேசிக்கவேண்டும். அதுவும் அன்பிற்காக அன்பு செலுத்த அருள்வாய்...இறைமகிமை ஓங்கட்டும்! அன்பின் வடிவான அவன் புகழ் ஓங்கட்டும்!

உடல்குழைய. என்பு எலாம் நெக்கு உருக, விழிநீர்கள்
ஊற்று என வெதும்பி ஊற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டு அணுகல் போலவே
ஓருறவும் உன்னிஉன்னிப்,

படபடென நெஞ்சம் பதைத்து உள் நடுக்குறப்
பாடி ஆ டிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவு அனைய புன்னகை
பரப்பிஈ ஆர்த்து ஆர்த்து எழுந்து.

மடல் அவிழும் மலர் அனைய கைவிரித்துக் கூப்பி.
வானே அவ் வானில் இன்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழிஎன வாழ்த்தி ஏத்தும்

கடல்மடை திறந்தனைய அன்பர் அன் புக்கு எளியை
கல் நெஞ்சனுக்கு எளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே." (தா.பா.50)

- உடம்பானது மெலியவும், எலும்புகள் எல்லாம் நெகிழ்ந்து உருகவும், கண்களிலிருந்து கதகப்பான நீர் பெருகவும்,

- காந்தத்தைக் கண்ட ஊசி நெருங்கிச் சென்று ஒட்டிக் கொள்வதுபோல ஓர் உறவாக ஒட்டிக் கொள்ள நினைந்து நினைந்து மனம் படபட எனப் பதைப்பவும்,
- உள்ளத்தில் நடுக்கம் தோன்றவும், பாடியும் ஆடியும் குதித்தும்,
- குளிர்ந்த சந்திரன் போன்ற முகத்தில் நிலவொளி போல புன்னகை தோன்றவும்.
- ஆரவாரம் செய்து,
- மடல்விரியும் மலர் போல கையை விரித்தும்,
- பின்னர் கூப்பியும்,
- "மேகமே! அம்மேகத்திலிருந்து பொழியும் இன்பம் தரும் மழையே!
- அம்மழை நீர் திரண்டு ஓடும் வெள்ளமே!
- நீ நீடுழி வாழ்வாயாக!" என வாழ்த்திப் போற்றும், கடல் மடை திறந்தாற் போல அன்பினைப் பொழியும் அன்பரது அன்புக்கு எளியை!
- கல் போன்ற நெஞ்சம் உடைய எனக்கும் எளியையோ? அன்பு அல்லது கருணைகடவுள்

கல் போன்ற நெஞ்சம் உடைய எனக் கும் எளியையோ?!" என்கிறது திரு வா சகம். அன்பும் கருணையும் கொண்டது இறைநிலை என்கிறது வேதாத்திரியம்.

நமது உடலை பாதுகாக்கச் செய்யும் செயல் இறைவழிபாடு இல்லையா!. அதுபோல் மற்றவரையும் பாதுகாக்க நாம் செய்யும் செயலும் உதவியும் இறைவழிபாடுதான் என்ற தெளிவையும் பெற வேண்டும்.

அதற்கு ஏற்பப் பிறரை மதித்து நடத்தவும் வேண்டும். இந்த முறையில் இறைவனை அறிந்தால் அன்பு மலரும். ஏனென்றால் இறைநிலை என்பது இறுக்க ஆற்றல். எல்லாவற்றையும் ஈர்த்துப் பிடித்துக் கொண்டு இருக்கிறது.

இந்தப் பேரியக்க மண்டலத்தில் உள்ள கோடான கோடி நட்சத்திரங்களை எல்லாம் கட்டிப் பிடித்து ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் வைத்துக் கொண்டிருக்கிறதே இதுதான் அன்பு. அன்பு என்றால் ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருப்பது, கவர்ந்து பிடித்துக் கொண்டிருப்பது.

அந்த அன்புக்கு மேலாக எல்லாம் நலமாக இருக்க வேண்டி உதவி செய்வது கருணை. இந்த இரண்டும் வேறு வேறு அல்ல. அன்பை உணர்ந்தால் தானாகவே கருணை பிறக்கும்.

உதாரணமாக:

ஒரு குழந்தையைத் தாய் தன்னோடு இணைத்துக் கொண்டிருப்பது, விடாமல் பார்த்துக் கொள்வது அன்பு(□□□□). அதற்கு மேலாக அதை ஊட்டி வளர்ப்பது கருணை (Compassion).

இறைவனின் தன்மாற்றத்தில் தாவரம் முதல் எல்லா இடங்களிலும் இந்த அன்பை பார்க்க முடியும்.

மாமரத்தில் ஒரு பிஞ்சு தொங்கிக் கொண்டிருக்கிறது. அது விழாது இருப்பதற்குக் காம்பு அதைப் பிடித்துக் கொண்டு இருக்கிறது.

அது மேலும் வளரும்போது அதனுடைய கவனத்திற்கு தகுந்தவாறு காம்பு பெரிதாகி அதை விழாமல் பிடித்துக் கொண்டிருக்கிறதே அதுதான் அன்பு.

அதற்கு மேலாக அது வளர்வதற்கு வேண்டிய இரசத்தை ஊட்டி பாதுகாத்து பெரிதாக்கி பழமாக வளரச் செய்கிறது. அதுதான் கருணை.

அன்பும் கருணையும் இறைநிலையின் தன்மை. இது சீவகாந்தத்தின் மூலமாக எழும் இறைநிலையின் மலர்ச்சி.

“கருவுக்குள் முட்டைக்கும் கல்லுக்குள் தேரைக்கும்
உணவை வைத்த இறைவன் என்னை மட்டும் விட்டு விடுவானா?”

என்று பழைய பாடல் ஒன்றின் மூலம் அறிகிறோம்.

நாம் தோன்றுவதற்கு முன் நமக்குத் தேவையானவற்றை இறைவன் பூமியில் படைத்திருக்கிறான் என்பதை நாம் அறிவோம்.

ஒருவருக்கு வாழ்க்கைத் துணை தேவை என்றால் உடனே தயார் செய்யவா முடியும்?

எவ்வளவு கருணையோடு நமக்காக உலகில் படைத்து வளர்த்து நம் வளர்ச்சிக்காகவும், மகிழ்ச்சிக்காவும் அருள்புரிகிறது.

சிந்தித்தால், ஒவ்வொரு விஷயத்திலும் சமுதாயத்திலிருந்தே நமக்கு உதவி வருகிறது என்பதை அறிய முடியும்.

எனவே, அன்பை நாம் பெற வேண்டுமெனில் முதலில் அன்பை நாம் தந்தாக வேண்டும்.

அன்பும் கருணையும் தன்னை உணர்ந்த உயிருக்கு எளிதில் புரியும். தன்னை உணர நினைப்பவர்க்கு அன்பும் கருணையும் நிறைந்த மனம் இறைநிலையோடு இணைத்து வைக்கும்.


தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
தேஜோமயானந்தம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
பொருள்
வணக்கம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்,


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
பரசிவ
வணக்கம்...
பேராசிரியர்,
எழுத்தாளர் திரு
மன்னார்குடி
பானுகுமார் ஐயா
அவர்கள்


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
பரசிவ
வணக்கம்...
பேராசிரியர்,
எழுத்தாளர் திரு
மன்னார்குடி
பானுகுமார் ஐயா
அவர்கள்

# 10. நல்லறிஞர் எக்காலமும் உதவுவார்.

பிறருக்கு உதவுதல் என்பது குணமல்ல... வரம்! – நெகிழ்ச்சிக் கதை

`நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும், உதவி தேவைப் படுபவர்களுக்கும் உதவவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் அமெரிக்க நடிகை வர்ஜினியா வில்லியம்ஸ்.

பிறருக்காக இரக்கப்படும் சுபாவம், மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை மனிதர்களுக்கு அமைவது மாபெரும் வரம்.

பிறரின் கனவுகளை அடைய நாம் உதவினால், நம் இலக்கை நாம் எளிதாக அடைந்துவிட முடியும் என்பது இயற்கை விதி.

ஏதோ ஒரு வழியில் அதற்கான உதவி நமக்குக் கிடைத்தே தீரும். நம்மால் பிறருக்கு புது வாழ்க்கை அமையலாம், செல்வம் சேரலாம், தைரியம் தரலாம், புது நம்பிக்கையளிக்கலாம்.

இவையெல்லாம் இரக்கத்தின் மூலமாகத்தான் சாத்தியமாகும். பிரதிபலன் எதிர்பாராமல் உதவி செய்வது சிலரின் குணமாகவேகூட இருக்கும்.

அப்படிப்பட்ட, வணக்கத்துக்குரிய மனிதர்கள் நம்மைச்சுற்றி இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மனிதரை அடையாளம் காட்டும் கதை இது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரம். அது ஒரு மருத்துவமனையின் பிரத்யேக வார்டு. உள்ளே இருந்த படுக்கையில் முதியவர் ஒருவர் படுத்திருந்தார்.

அவருக்கு வந்திருந்தது உயிரைக் கொல்லும் ஒருவகை புற்றுநோய். இன்னும் ஓரிரு நாள்கள்கூட அவர் தாங்க மாட்டார் என்று மருத்துவர்களே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று மாலை நேரத்தில், அந்த முதியவரின் வார்டுக்கு, அவரை கவனித்துக் கொள்ளும் நர்ஸ் வந்தார்.

``சார்... உங்களைப் பார்க்க உங்க மகன் வந்திருக்கார்.''

கிழவர் கண்ணைத் திறந்து பார்த்தார். வலி நிவாரணி மாத்திரைகள், மயக்க மருந்துகள் அதிக அளவில் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்ததால், கண்களையே மெதுவாகத்தான் அவரால் திறக்க முடிந்தது.
நீர்த் திரையிட்ட கண்களால், எதிரே மங்கலாக நர்ஸுக்கு அருகே ஓர் உருவம் இருந்ததைப் பார்த்தார்.
அவருக்கு எதிரே 20 வயதுக்குள் இருக்கும் ஓர் இளைஞன் நின்றுகொண்டிருந்தான். சீருடை அணிந்திருந்தான்.

அவன் அணிந்திருந்த சீருடை `யூத் மரைன்□ (□□□□□ □□□□□□) என்கிற, அமெரிக்க அரசு நடத்தும் இளைஞர்களுக்கான ஒரு திட்டத்துக்கானது.

படுக்கையில் இருந்த முதியவர், நர்ஸிடம் தன் மகன் `யூத் மரைன்□ புரோக்ராமில் இருக்கிறான் என்று சொல்லியிருந்தார். அதனால்தான், நர்ஸ் அவனைச் சரியாகக் கண்டுபிடித்து அவர் முன்னே நிறுத்தியிருந்தாள்.



இளைஞன் படுக்கைக்கு அருகே போய் நின்றான். அவர், தன் கைகளால் அவன் கைகளைப் பிடிக்கத் துழாவினார்.

அதைப் பார்த்ததும் இளைஞன் தன் கையை அவர் கைக்கு அருகே நீட்டினான். நடுங்கும் தன் கரங்களால் முதியவர் பாசத்தோடும் வாஞ்சையோடும் அவன் கைகளைப் பற்றிக்கொண்டார்.

பிறகு கண்களை மூடிக்கொண்டார். நர்ஸ், ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து, முதியவரின் படுக்கைக்கு அருகே போட்டாள்.

இளைஞன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். அன்று இரவு முழுக்க அவர், அவனுடையக் கைகளைப் பிடித்தபடியே இருந்தார்.

அவ்வப்போது அந்த நர்ஸ், அவர் உடல்நிலை எப்படியிருக்கிறது என்று பார்ப்பதற்காக உள்ளே வருவார். இளைஞன், முதியவரின் கைகளைப் பற்றியபடி இருப்பான்.

ஒருமுறை பொறுக்க முடியாமல் நர்ஸ் சொன்னார்... ``தம்பி... நீங்க வேணும்னா கொஞ்ச நேரம் வெளியே போய் ரெஸ்ட் எடுங்களேன். எவ்வளவு நேரம்தான் இப்படியே உட்கார்ந்திருப்பீங்க?’’
``வேண்டாம். பரவாயில்லை’’ என்று சொல்லிவிட்டான் அந்த இளைஞன். நர்ஸின் வற்புறுத்தலால் ஒரே ஒரு கப் காபி மட்டும் கேட்டு வாங்கிப் பருகினான்.



அடுத்த நாள் அதிகாலையில் நர்ஸ் வந்தபோது அந்த இளைஞன் சில நல்ல வார்த்தைகளை, முதியவரின் காதில் சொல்வதைக் கண்டாள்.

ஆனாலும் அவர் கண் திறக்கவில்லை. அவர் கைகள் மட்டும், இளைஞனின் கையை இறுகப் பற்றியிருந்தது.

விடிந்தது. கிழவர் இறந்துபோயிருந்தார். இளைஞன், அவருடைய தளர்ந்த கையைத் தன் கையிலிருந்து வெகு ஜாக்கிரதையாக விடுவித்து, மெள்ள படுக்கையில் வைத்தான். வெளியே வந்தான். நர்ஸிடம் விஷயத்தைச் சொன்னான்.

``ரொம்ப சாரி தம்பி... உங்க அப்பாவின் மரணத்துக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்...'' என்றார் அந்த நர்ஸ்.

``நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க. அவர் என் அப்பா இல்லை. இதுக்கு முன்னாடி நான் அவரைப் பார்த்ததுகூட இல்லை.''

``அவர் உங்க அப்பா இல்லைன்னா, நான் அவர்கிட்ட உங்களைக் கூட்டிட்டு வந்தப்போவே சொல்லியிருக்கலாமே... ஏன் சொல்லலை?''

``நீங்க அவர்கிட்ட என்னைக் கொண்டு வந்து நிறுத்தினப்பவே தப்பா என்னைக் கூட்டிட்டு வந்துட்டீங்கனு தெரிஞ்சுடுச்சு. நீங்க ரொம்ப அவசரத்துல இருந்தீங்க. அதோட அந்தப் பெரியவரைப் பார்த்ததும், அவர் தன் மகனுக்காக ஏங்குறார்ங்கிறதும், அவன் இப்போ இல்லைன்னும் புரிஞ்சுது.

அதோட அவர் என் கையைப் பிடிச்சதும், அவரால நான்தான் அவரோட மகனா, இல்லையான்னு சொல்ல முடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருக்கார்னு புரிஞ்சுது. அவரோட அந்தக் கடைசி

நிமிஷத்துல அவருக்கு எந்த அளவுக்கு அவரோட மகனின் அருகாமை தேவைப்படுதுனு புரிஞ்சுது. அதான் அப்படியே உட்கார்ந்துட்டேன்.' '

நர்ஸ் பதில் பேச முடியாமல் பார்த்துக்கொண்டிருக்க, அந்த இளைஞன் மெள்ள நடந்து வெளியே போனான்.

இங்குஅற்ற படிஅங்கு ம் என அறியும் நல்லறிஞர்
எக்காலமும் உதவுவார்.
இன்சொல் தவறார். பொய்மை யாம் இழுக்கு உரையார்
இரங்குவார். கொலைகள் பயிலார்.

சங்கற்ப சித்தர் அவர் உள்ளக் கருத்தில் உறை
சாட்சிநீ, இகபரத்தும்
சந்தான கற்பகத் தேவாய் இருந்தே?
சமஸ்த இன் பமும் உதவுவாய்.

சிங்கத்தை ஒத்துஎன்னைப் பாயவரும் வினையினைச்
சேதிக்க வருசிம்புளே
சிந்தா குலத்திமிரம் அகலவரு பானுவே
தீனனேன் கரையேறவே

கங்கு அற்ற பேராசை வெள்ளத்தின் வளர் அருள்
ககன வட் டக் கப்பலே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே." (தா.பா.56)

- இவ்வுலகில் பற்றை விட்டது போலவே அவ்வுலகிலும் பற்றை விட வேண்டும என அறியும் நல்லறிவடையோர், எல்லாக் காலங்களிலும் பிறருக்கு உதவி செய்தே வாழ்வர்.
- இன்சொல் பேசவதிலிருந்து தவறமாட்டார்.
- பொய் என்னும் இழுக்கைப் பேசமாட்டார்.
- பிறர் துன்பம் கண்டு இரக்கம் காட்டுவர்.
- கொலைகள் செய்யார்.
- கொண்ட கொள்கையிலிருந்து மாறுபடாத சித்தர்களது உள்ளத்தில் சான்றாய் உறைபவன் நீ,
- இம்மையிலும் மறுமையிலும சந்தானம், கற்பகம் போன்ற தெய்வத் தன்மை பொருந்திய மரம் போல் இருந்து, எல்லா இன்பமும் தந்து உதவுவாய்!

## வேதாத்திரியம் தரும் அறவழி வாழ்க்கை

மனிதனுக்கு ஆக்க வாழ்வுக்காக நமது முன்னோர்கள் அமைத்துக் கொடுத்திருக்கும் இன்றியமையாத தேவைகள் நான்கு

1அறம் 2. பொருள் 3. இன்பம் 4. வீடு பேறு. அறவழியில் பொருளீட்டி அதன் மூலம் இன்பம் துய்த்தால், தானாகவே அறிவு தடையற்ற வளர்ச்சி பெற்று முழுமைப் பேறாகிய வீடுபேறு கிட்டும்.

எனவே மனிதன் செய்யும் தொழில் இந்த நான்கில் ஒன்றைக் குறி வைத்துச் செயல் புரியும்போது மற்ற மூன்றும் சிறிதும் கெடாதவாறு காத்து விழிப்பு நிலையில் ஆற்ற வேண்டும்....

இந்த முறையில் தான் மனித வாழ்வு கெடாமலும் சீர்குலையாமலும் இனிமை காக்கப்படும்.

அறம் என்றால் உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஒழுக்கம், கடமை, ஈகையெனும் மூன்றுறுப்புக்கள் ஒன்றிணைந்த எந்தச் செயலும் அறமேயாகும்.

இவ்வறவாழ்வில் பொருளீட்டி வாழ்வது மனிதனுக்குள்ள இயல்பான ஆற்றல்தான். இதனைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அறநெறி இயல்பாகவும் எளிதாகவும் அமைந்து விடும். அறவழியில் பொருளீட்டி வாழ்வை நடத்தி மிஞ்சிய பொருளைச் சேர்த்து வைப்பதும் மனித சமுதாயச் சூழ்நிலையில் ஒப்புக் கொள்ளப்பட்ட நீதியேயாகும்.

மரணம் நெருங்கும்போது அறவழியில் ஈட்டிப் பொருள் சேர்த்து வைப்பவரிடம் அறிவில் ஒரு தெளிவு பிறக்கிறது.

அவன் சேர்த்து வைத்திருக்கும் பொருள் தனக்குப் பின்னால் நல்ல வழியில் மனித சமுதாயத்திற்கும் பயன்பட வழி வகுத்து விடுகிறான்.

பொருள்பற்று என்ற தளையிலிருந்து தன்னைத்தானே விடுவித்துக் கொள்கிறான்.

அந்த அளவிற்கு அருள் பற்று மலர்ந்து விடுகிறது. மனம் இனிமையான அமைதியில் இணைகிறது. மரணம் நெருங்க நெருங்க அந்த இன்ப வெள்ளத்திலேயே மிதந்து கொண்டு இறைநிலையோடு கலந்து விடுகிறான்.

அறநெறி மறந்து பொருள் சேர்த்தவன் மரணம் நெருங்கும் போது அப்பொருளை எண்ணி வருந்துகிறான்.

இவ்வளவு பொருளையும் தவிர்க்க முடியாமல் விட்டு விட்டுப் போக வேண்டியிருக்கிறதே என்று மனம் கலக்கம் அடைகிறான்.

அறிவில் இருள் சூழ்ந்து கொள்கிறது. மரணம் நெருங்க நெருங்க நிமிடந்தோறும் அதிர்ச்சியோடு அச்சப்படுகிறான்.

இந்த அச்சத்தின் அதிர்ச்சியோடு அமைதியற்ற மரணம் அடைகிறான். பொருள்பற்று என்ற இருளிலிருந்து அவனால் மீள முடியவில்லை.

அந்தோபரிதாபம் இவன் சேர்த்து வைத்த பொருளோ அறம் தெரியாத குருடர்களிடமே சேருகிறது.

சூது, குடி, விபசாரம் என்னும் மூன்று வழியில் இந்தப் பொருள்கள் அனைத்தும் சூறை விடப்படுகிறது.

சூறை விடுபவர்களும் அவர்கள் புரியும் பாவச் செயல்களால் தீவினைப் பதிவுகளை ஏற்றுத் தலைமுறை தலைமுறையாக உடல், மனநோய்களில் சிக்கித் தவிக்கிறார்கள்

எனவே அன்பர்களே அறவழியில் பொருளீட்டுங்கள். பொருள் செழிப்பு நிச்சயமாக உண்டாகும்.

மீதமுள்ள பொருளில் ஈட்டும் போதே பிறர் நலத்துக்காக ஒரு சதவீதம் ஒதுக்கிச் செலவு செய்து பழகிக் கொண்டு எஞ்சிய பொருளை நல்ல முறையில் பங்கிட்டுக் கொடுங்கள்.

எப்போதும் மனம் பளுவற்றதாகவும் இனிமையாகவும், அமைதியாகவும் இருக்கும். நிலையான வாழ்வு பெறலாம்.

நீங்கள் விட்டுச் செல்லும் பொருள்கள் பலருக்கும் நலமளிக்கும் வழியில் செலவாகும் அதன் பயன் இன்பம் இன்பம் இன்பம்

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்

### YOUTUBE LINKS

1. சர்வ காலமும் நினைவனோ? https://youtu.be/MTD6y-J2N-w
2. ஆனந்த நிர்த்தமிடு கருணா கரக்கடவுளே https://youtu.be/VIKaY7sTguI
3. கதிக்கு வகை ஏதுபுகலாய்? https://youtu.be/_VAiMoRf4wA

4. நான் என்று நீ என்று இரண்டு இல்லை https://youtu.be/tGLpGc-zOqI
5. பொய்யும் மெய்யும் https://youtu.be/7LDW7W9C3Bg
6. பண்ணேன் உனக்கான பூஜை https://youtu.be/dBfDlUnq6Ss
7. சகமீது இருந்தாலும் மரணம் உண்டு https://youtu.be/bURK8jtbNkk
8. சதாகால பூஜையா ஒப்புவித்தேன் https://youtu.be/pqZaFu5-nSU
9. அன்பர் அன்புக்கு எளியை https://youtu.be/OPZ8RwIu2YY
10. நல்லறிஞர் எக்காலமும் உதவுவார் https://youtu.be/4b5gghUkjQw

## துணைநின்ற நூல்கள்.


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
6. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
7. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை
8. ஞானதீபமும் ஞானஒளியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை
9. வள்ளாரும் வேதாத்தரி மகரிஷியும். மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை
10. ஞானதீபம், சுவாமிக விவேகானந்தர், ராமகிருஷ்ணமடம், சென்னை.

# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)

4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்

8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்

18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து

19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்

11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000

2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar என்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்

9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2

44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2

79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து

114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?